# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
## CC No.290/2015

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw17/Pw7 |
| Name | : இளங்கோவன் |
| Father/Husband's Name | : கிருஷ்ணன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 62 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07.04.2026.

**முதல் விசாரணை:**

நான் வேலூர் போதை நுண்ணறிவு பிரிவு காவல் துணை கண்ணாகிப்பாளராக பணிபுரிந்து 29.02.2024 ல் பணி ஓய்வு பெற்றுள்ளேன். நான் தற்போது கடலூரில் வசித்து வருகிறேன். கடந்த 17.04.2015 ம் தேதி நான் மறைமலைநகர் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயசந்திரன் என்பவர் முதல் விசாரணை செய்து வைத்திருந்ததை எனது காவல் உதவி ஆய்வாளர் தன்ராஜ் என்பவர் மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு விசாரணை செய்து வைத்திருந்ததை 29.07.2015 ம் தேதி நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் செங்கல்பட்டு போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. முருகேசன் அவர்களை அணுகி இந்த வழக்கில் விபத்துக்குள்ளான இனோவா கார் பதிவு

எண் டி.என்.28 ஏ பி 8845 என்ற வாகனத்தை ஆய்வு செய்ததற்கான சான்று பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அந்த மோட்டார் வாகன சான்று அறிக்கை **அதசா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புறபட்டு சென்னை அரசு மருத்துவ கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவர் திரு.சரவணன் அவர்களை சந்தித்து இறந்து போன திரு.கண்ணன் பிரேதத்தை பிரேத பரிசோதணை செய்த சான்று பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த உடற்கூறாய்வு அறிக்கை **அதசா.ஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் என்னுடைய விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள் 279 304(எ) இதச வின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

புகார் தாரர் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். புகார் சம்பவம் நடந்து மறுநாள் தான் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே உதவி ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் மறு விசாரணை செய்தேனா என்றால் செய்தேன். நான் விசாரித்த போது சாட்சிகள் அனைவரும் உதவி ஆய்வாளரிடம் சொன்னதையே சொன்னதால் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

மேல் சொன்ன விவரத்தை இறுதி அறிக்கையில் சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. நான் ஆவணங்களை சரிப்பார்க்காமல் எதிரி மீது தவறான

**இறுதி அறிக்கை பதிவு செய்துள்ளேனா என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை.**

**மறுவிசாரணை இல்லை**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu